

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (24.11.2025) திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இருசக்கர மிதிவண்டி வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், செங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தைப் புதுப்பிப்பதற்கான உயர்மட்ட வல்லுநர் குழு மற்றும் கலைத்திட்ட வடிவமைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர். த.உதயச்சந்திரன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. சந்தர மோகன்.B, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர். வ.நாராயணன், மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் மற்றும் கலைத் திட்ட வடிவமைப்புக் குழுத்தலைவர் முனைவர். சுல்தான் அகமது இஸ்மாயில், மொஹாலி, இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன (IISER) அறிவியலாளர், பேராசிரியர் முனைவர். த.வி.வெங்கடேஷ்வரன் (இணையவழியாக), கணித அறிவியல் நிறுவன கணிதவியல் வல்லுநர் மேனாள் பேராசிரியர் முனைவர். இரா. இராமானுஜம் (இணையவழியாக), கலிபோர்னியா பல்கலைக்கழக மூலக்கூறு வரைகலை மற்றும் கணக்கீட்டு வளமைய உயிரியல் வல்லுநர் இயக்குநர் முனைவர். எ.இரா.அழகிய சிங்கம் (இணையவழியாக), மேனாள் இந்திய கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஷ்வின் (இணையவழியாக), மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் (வி.ஓய்வு), பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி. ந.லதா மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை மாவட்டம்

# தச்சம்பட்டில் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

திருவண்ணாமலை, நவ. 25 –

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தச்சம்பட்டியில் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இரு சக்கர மிதிவண்டி வாகனங்களை வழங்கினார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று (24.11.2025) திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இருசக்கர மிதிவண்டி வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி யில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், செங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறது. இந்தத் திட்டம், மாணவ, மாணவிகளின் பள்ளி வருகையை உறுதி செய்வதோடு, அவர்களின் போக்குவரத்துச் செலவைக் குறைக்கவும் உதவுகிறது.

அதனடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 150 அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் 17 அரசு உதவி பெறும் பள்ளி என மொத்தம் 167 பள்ளிகளை சேர்ந்த மாணவ – மாணவிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை மற்றும் பிற்படுத்த ப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக விலையில்லா மிதி வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 25731 பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், 2022 – 2023 ஆம் ஆண்டில் 21489 பள்ளி மாணவ – மாணவிகளுக்கும், 2023 – 2024 ஆம் ஆண்டில் 21631 பள்ளி மாணவ – மாணவிகளுக்கும், 2024 – 2025 ஆம் ஆண்டில் 20649 பள்ளி மாணவ–மாணவிகளுக்கும், 2025 2026 ஆம் ஆண்டில் 20879 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய தினம் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செல்வம், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி மாநில தி.மு.க சார்பில் – இரா.சிவா தலைமையில்

# முரசொலி மாறன் 22வது நினைவு நாள் நிகழ்ச்சி!

## திருவுருவப் படத்திற்கு எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. மலர்தூவி மரியாதை!

புதுச்சேரி, நவ. 25 –

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், மறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான முரசொலி மாறன் அவர்களின் 22–வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் மண்ணாடிப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட திருக்கனூர் கடைவீதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., கலந்து கொண்டு அலங்கரிக்கப்பட்ட முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக் குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கோபால், வே.கார்த்திகேயன், எஸ். எஸ். செந்தில் குமார், டி.செந்தில்வேலன், அமுதா குமார், தொகுதி செயலாளர்கள் ம. கலைவாணன், இரா. சக்திவேல், செ. நடராஜன், பி.சா.இளஞ்செழியப் பாண்டியன்,

இந்திரா நகர் தொகுதி பொறுப்பாளர் பசுபிக் சங்கர், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, தொகுதி அவைத் தலைவர் மண்ணாங்கட்டி, துணைச் செயலாளர் அழகப்பன், மாநில தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பாரதி, அரசம்மாள், அருணகிரி, பழனிசாமி, முன்னாள் இளைஞர் அணி சந்தோஷ் குமார் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் என பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

## 9வது சீக்கிய குரு

# ஸ்ரீ குரு தேக் பகதூரின் உயரிய தியாகத்தின் 350 வது ஆண்டு விழா!

## பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மானுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக் கடிதம்!

**சென்னை, நவ. 25 –**

**பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதம் வருமாறு :**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 17.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஹர்பஜன் சிங் மற்றும் பஞ்சாப் மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேந்தர் குமார் கோயல் ஆகியோர் சந்தித்து, பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நவம்பர் மாதம் நடைபெற வுள்ள ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பாக, தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோரை அவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில், நேற்று முன்தினம் (23.11.2025) ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதம் மற்றும் நினைவுப் பரிசினை பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.



பஞ்சாப் மாநில அரசின் சார்பில், ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதத்தை, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதத்தில்,**

குரு தேக் பகதூர் ஜியின் 350வது தியாகிகள் தின நினைவேந்தல் விழாவில் கலந்து கொள்ளுமாறு தனக்கு அளித்த அழைப்பிற்கு மீண்டும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும்,

இந்த முக்கியமான நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களையும் தனது சார்பாக இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாகவும், அவர்களை அன்புடன் வரவேற்க முன்வந்த தங்கள் நல்லெண்ணத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், உங்களிடம் வழங்குவதற்கு அவர்களிடம் அளித்துள்ள நினைவுப் பரிசினை அன்புடன் ஏற்றுக்கொள்ளு மாறும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

விழா மிகச் சிறப்பாக நடைபெற தனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, குரு தேக் பகதூர் அவர்கள் நிலைநாட்டிய துணிச்சல், கருணை மற்றும் மதச் சுதந்திரம் ஆகிய உன்னத இலட்சியங்களுக்கு தனது மரியாதையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## எடப்பாடி நகரத்துக்கு உட்பட்ட பாக அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன், ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகள், நகர-பகுதி-பேரூர் வட்டங்கள் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், சேலம் மேற்கு மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கான நிர்வாகிகளின் அறிவிப்பு ஏற்கனவே வெளியான நிலையில், எடப்பாடி நகரத்தில் விடுபட்ட பாக அமைப்பாளர்கள் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

### சேலம் மேற்கு மாவட்டம் - எடப்பாடி சட்டமன்றத் தொகுதி

**எடப்பாடி நகரம்**

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 186 : ச.மோகன்ராஜ், 7, நாச்சிப்பாளையம், வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 187 : சி.ராமசுந்தரம், 21, கீச்சங்காட்டுவளவு, வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 188 : ஆ.விக்னேஷ், 81–ஏ, நடுத்தெரு, வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 189 : ர.வரதராஜன், 73/41, வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 190 : தி.யோகேஸ்வரன், ஆவணியூர், வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 191 : த.அப்துல்வாஹிப், 22, ஆவணியூர் கோட்டை, வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 192 : ரா.இளங்கோவன், 32/3, முண்டாச்சியூர் காட்டுவளவு, வி.என்.பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 193 : கு.மணிகண்டன், 5/41, க.புதூர் அருந்ததியர் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 194 : மா.ஞானமணிகண்டன், 93–சி–6–சி, க.புதூர் மேற்குத் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 195 : பி.முத்து, 95–எப், கோணப்பைப், க.புதூர் மேற்குத் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 196 : மா.ஈஸ்வரன், 51, கோணப்பைப் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 197 : பி.சூரியபிரகாஷ், 12/26, க.புதூர் புதிய தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 198 : அ.சரவணன், 29, க.புதூர் பழைய தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 199 : சே.ராமச்சந்திரன், 12/14, பூலாம்பட்டி சாலை, எடப்பாடி, சேலம்.
பாகம் – 200 : த.ரஞ்சித்குமார், 51–என்.ஏ, ஜலகண்டாபுரம் சாலை, எடப்பாடி, சேலம்.
பாகம் – 201 : பா.அசேன், 14, புதுப்பேட்டை, நைனாம்பட்டி, வெள்ளாண்டிவலசு எடப்பாடி, சேலம்.
பாகம் – 202 : ரா.தினேஷ்குமார், 4–சி, பழையபேட்டை, நைனாம்பட்டி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 203 : எம்.கலையமுதன், 40–பி/4, நைனாம்பட்டி ரோட்டுத் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 204 : கா.சசிகுமார், 50–டி–2, நைனாம்பட்டி ரோட்டுத் தெரு, வெள்ளாண்டிவலசு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 205 : சா.ஜீவா, புதியத்தெரு, வெள்ளாண்டிவலசு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 206 : ர.பரத்ராஜ், 200, புதிய தெரு, வெள்ளாண்டி வலசு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 207 : எம்.தினேஷ்குமார், 32–79, பழைய தெரு, வெள்ளாண்டிவலசு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 208 : கு. பிரதீஸ், 23/10, குலாளர் தெரு, வீரப்பம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 209 : பி.சண்முகப்பிரியன், 5–டி, காட்டுவளவு, வீரப்பம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 210 : பெ.சிவகண்ணன், 385, வடக்குத் தெரு, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 211 : கு.பாலமுருகன், 1/3, பூசாரி காட்டுவளவு, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 212 : பூ.தங்கதுரை, 1–பி, செங்கான் காட்டுவளவு, ஆலச்சம்பாளையம், எடப்பாடி.
பாகம் – 213 : பி.குணா, 217/179, வடக்குத் தெரு, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 214 : ப.கார்த்திக், 17/15, வடக்குத் தெரு, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 215 : செ.குணசேகரன், 61–ஏ, ஆ.காட்டூர், ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 216 : வே.கோபால், 62, ஏ.டி.சி. டெப்போ பின்புறம், சின்னேரி, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 217 : சு.குமரவேல், 681, ஏ.டி.சி. டெப்போ பின்புறம், சின்னேரி, ஆலச்சம்பாளையம், எடப்பாடி, சேலம்.
பாகம் – 218 : எம்.சிவா, 44–ஏ, தாவாந்தெரு காட்டுவளவு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 219 : ரா.முகில்அரசன், 75/66–ஏ, தாவாந்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 220 : க.சிவானாந்தம், 269, காட்டுவளவு தெற்குத் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 221 : ப.நூர் முகமது, 31, கடைவீதி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 222 : செ.கோவிந்தராஜ், 56, நடுத்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 223 : எஸ்.சுதர்சன், 23/77, தெற்கு பவுண்டு தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 224 : த.சௌந்தரராஜன், 134, நடுத்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 225 : க.சந்திரசேகரன், 22, எல்லை சந்து, எடப்பாடி, சேலம்.
பாகம் – 226 : மு.கௌரிசங்கர், 64/71, சின்னமணலி மேட்டுத்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 227 : பா.மதன், 4–ஏ/97–சி, சின்னமணலி மேட்டுத்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 228 : சி.கார்த்திகேயன், 264, பழைய எடப்பாடி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 229 : மா.சுதாகர், 178/ஏ, பழைய எடப்பாடி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 230 : கி.கௌசங்கர், 8–ஏ, சின்னமணலி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 231 : ஆ.சூரிய பிரகாஷ், 67–ஏ–14, சின்னமணலி கிழக்குத் தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 232 : மு.வினோத்குமார், 42–ஏ, செல்லியாண்டி அம்மன் கோயில் தெரு, கவுண்டம்பட்டி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 233 : க.அருள்செல்வம், 54–டி, கவுண்டம்பட்டி தெற்குத்தெரு, எடப்பாடி, சேலம்.
பாகம் – 234 : கோ.பிரபாகரன், 85, வடக்குத்தெரு, கவுண்டம்பட்டி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 235 : ரா.கிருஷ்ணன், 15–பி, சின்னத்தெரு, கவுண்டம்பட்டி, எடப்பாடி, சேலம்.
பாகம் – 236 : ரா.ஜீவானந்தம், 74–பி, கவுண்டம்பட்டி, எடப்பாடி, சேலம்.

**அன்பகம்**
**சென்னை – 18**
**நாள் : 23–11–2025**

**உதயநிதி ஸ்டாலின்**
**செயலாளர்**
**தி.மு.க. இளைஞர் அணி**